**02.04.2025.** CC. 223/2010 PW.1 திரு.ராஜகுமார்

**கடந்த 03.04.2024 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 14/2024 dated 18.12.2024 ன் படி குவி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

குறுக்கு விசாரணை : 2, 3, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மையானது கு.வி.மு.ச பிரிவு 317(1)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 1, 4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். 2010 ம் ஆண்டு காலகட்டத்தில் நான் குளச்சல் டாஸ்மார்க்கில் வேலைப்பார்தேன். என்றால் சரிதான். சம்பவ காலகட்டத்தில் நான் வேலைப்பார்த்தேன் என்றால் சரிதான். அன்றையதினம் மதியம் 01.00 மணிக்கு மேல் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் காசளாராக வேலைப் பார்த்தேன்.

2. காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை எங்களுக்கு வேலை நேரம். நான் வீட்டிற்கு வரும்போது அந்த பொறுப்பை வேறு ஒரு நபரிடம் கொடுத்துவிட்டு தான் வருவேன். மதிய உணவு இடைவேளை 01.00 முதல் 02.00 மணி வரை ஆகும். சம்பவத்தன்று நான் சாப்பிட வந்துவிட்டு திருப்பி வேலைக்குச் செல்லவில்லை. நான் சம்பவத்தை 02.30 மணிக்கு கேள்விபட்டேன். நான் வீட்டிலிருந்து சம்பவத்தை கேள்விபட்டு தான் சம்பவயிடத்திற்கு போனேன். 02.30 மணிக்கு சம்பவத்தை கேள்விபட்டு 04.30 மணிக்கு தான் சம்பவயிடம் சென்றேன்.

3. என்னுடைய வீட்டிற்கும் கோடிமுனை பஸ் நிலையத்திற்கும் இடையே அரை பர்லாங் தூரம் இருக்கும். நான் வயதான காரணத்தினால் பயந்துகொண்டு உடனடியாக சம்பவயிடத்திற்கு செல்லவில்லை. எனது மகனுக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் பிரச்சினை எதுவும் இருந்ததா என்றால் அவர்கள் ரவுடி பையன்கள். அவர்கள் கேங்காக தான் இருப்பார்கள். சம்பவத்தில் என் கையை அடித்து உடைத்தது மதன். என் மூக்கை உடைத்தது ரமேஷ், இன்று வரை அந்த அடையாளம் என் முகத்தில் இருக்கிறது என்று சாட்சி தனது மூக்கை காண்பிக்கிறார்.

4. எனக்கு அதில் எலும்பு முறிவு ஏற்பட்டதா என்றால் ஆம் ஏற்பட்டது. ஜேம்ஸ் மருத்துவமனையில் சிகிட்சை பெற்றேன். நான் காயம்பட்டவுடன் என்னை எனது 4 வது மகன் ராஜ் என்பவர் ஜேம்ஸ் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். நான் எனது முதல்விசாரணை சாட்சியத்தில் என்னை கடலில் தாழ்த்தியதாக சொன்னேன் என்றால்

ஆம் சொன்னேன். நான் ஒருநாள் சுயநினைவு இல்லாமல் இருந்தேன். நான் முதல் விசாரணையில் 12 நாட்கள் சுயநினைவு இல்லாமல் இருந்ததாக சொல்லவில்லை. சிகிட்சைப்பெற்றதாக தான் சொல்லியுள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும்.

5. நான் போலீசாரிடம் மருத்துவமனையில் வைத்து புகார் மனுக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் வாசித்துப் பார்த்து தான் கையெழுத்துப்போட்டேன். என்னுடைய வாக்குமூலத்தில் கண்டால் தெரியும் ஆண்களும், பெண்களும் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசாரிடம் 12.03.2010 அன்று தான் நான் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் ஆம் அப்போது தான் போலீசார் வந்தார்கள். எதிர்கட்சிகளின் அழுத்தம் காரணமாக வரவில்லை.

6. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் உடந்தை என்று நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய இடது கை கட்டைவிரல் தான் முறிந்தது. ஜேம்ஸ் மருத்துவமனையில் அதற்கான சிகிட்சைப் பெற்றேன். எனக்கு கையில் எலும்பு முறிவு ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மருத்துவர் சான்று வழங்கியுள்ளார்.

7. என்னை போலீசார் விசாரிக்கும் போது மருத்துவமனையில் புகார் அளித்த விவரத்தைக் கூறினேன். போலீசாரிடம் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் என்னை மிரட்டிய விவரத்தை சொல்லாமல் விட்டுவிட்டதாக வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன். அதற்கான ஆதாரங்களை கொடுத்துள்ளேன். நான் சொன்ன சம்பவ நேரத்தில் சம்பவயிடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும், எனக்கு ஏற்பட்டகாயம் வேறு எங்கோ ஏற்பட்டதென்றும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் எங்களுக்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு உண்மைக்குமாறாக புகார் அளித்து அதில்நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி தானாக சொல்கிறார். எஸ்.பி ஆபிசில் முறையிட்டு பின்னர் டி.எஸ்.பி ஆபிசில் முறையிட்டு அதன் பின்னர் தான் வழக்குப் பதிவுச் செய்தார்கள்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.